TAMILTH Tanjavur 1 Regional_02 G SURESH 215221 50415

அழகேசம்: அரியலூர் மாவட்டம் அம்பாபூர் கிராமத்தைச் சேர்ந்தவர். சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டதால் ஆங்கில அரசால் தண்டனை விதிக்கப்பட்ட, 1929-ம் ஆண்டு சென்னை மத்திய சிறையில் 3 மாதங்கள், 1930-ம் ஆண்டு அலிப்பர் சிறையில் 6 மாதங்கள் அடைக்கப்பட்டிருந்தார்.

கோவிந்தராஜி: அரியலூர் மாவட்டம் திருக்களப்பூர் கிராமத்தைச் சேர்ந்த இவர், வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் ஈடுபட்டார். இதனால், இந்திய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அலிபுரம் சிறையில் 9 மாதங்கள் சிறை தண்டனை அனுபவித்தார்.

சின்னச் சின்னதாய்

மயிலாடுதுறை மாவட்டம் திருவாவடுதுறை ஆதீன கர்த்தரிடம் ஆசிபெற்ற தமிழக வேளாண் துறை அமைச்சர் ர.வினோத்.

குடவாசல் பேரூராட்சி நிர்வாகத்தை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூ. ஆர்ப்பாட்டம்

திருவாரூர்

திருவாரூர் மாவட்டம் குடவாசல் பேரூராட்சி நிர்வாகத்தை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் குடவாசல் பேரூராட்சி அலுவலகம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்துக்கு, குடவாசல் நகரச் செயலாளர் டி.ஜி.சேகர் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் டி.முருகையன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஜி.சுந்தரமூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில், டெண்டர் விட்டும் 2 ஆண்டுகளாக கிடப்பில் உள்ள தண்டலை மயான கட்டிடம், சாலை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஓகை மாரியம்மன் கோயில் தெருவில் உள்ள குளத்தில் போடப்பட்டுள்ள பேவர் பிளாக் நடைபாதை உடைந்துள்ளதை உடனே சரிசெய்ய வேண்டும். தண்டலையில் உள்ள நவீன அரிசி ஆலையில் இருந்து உமி காற்றில் பறந்து பொதுமக்களுக்கு சுவாசக் கோளாறு, கண் பாதிப்பு ஏற்படுத்துவதை தடுக்க, மாசு கட்டுப்படுத்தும் கூண்டு அமைக்க வேண்டும். பல லட்ச ரூபாய் செலவு செய்து கட்டி முடிக்கப்பட்ட மீன், இறைச்சி மார்க்கெட் கடைகளை குறைந்த வாடகையில் ஏலம் விட்டு இறைச்சி மார்க்கெட்டை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். பேரூராட்சி பகுதியில் உள்ள கழிப்பறைகளை செயல்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும். வாய்க்கால், குளங்களில் கொட்டப்படும் குப்பையை நீக்கி, நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

கொள்ளிடம் அருகே வயதான தம்பதி விஷம் குடித்து தற்கொலை

மயிலாடுதுறை

மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் அருகே புத்தூர் வாணிய தெருவைச் சேர்ந்தவர் காமராஜர்(65). இவரது மனைவி வள்ளி(59). இவர்களின் 2 மகன்களுக்கும் திருமணமாகி சென்னையில் குடும்பத்துடன் வசித்து வருகின்றனர். கணவன், மனைவி இருவருக்கும் அடிக்கடி உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டு வந்ததாகவும், தனிமையாக வாழ்ந்து வருவதில் சிரமம் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதனால், நேற்று முன்தினம் இருவரும் விஷம் அருந்தியுள்ளனர். தகவலறிந்த அக்கம்பக்கதினர் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த காமராஜ் மற்றும் வள்ளி ஆகிய இருவரையும் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி வள்ளி நேற்று காலையும், காமராஜ் மாலையும் உயிரிழந்தனர். கொள்ளிடம் ஆணைக்காரன்சத்திரம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தின போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிக்கு பதக்கம், சான்றிதழ், பரிசு வழங்கிய நாகை மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார்.

நாகை மக்கள் குறைதீர் கூட்டத்தில் 1,000-க்கும் அதிகமான மனுக்கள்

நாகப்பட்டினம்

நாகை ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 1,000-க்கும் அதிகமான மனுக்கள் வரப்பெற்றன.

நாகை ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் பிரவீன் குமார் தலைமையில் மக்கள் குறைதீர் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் வங்கிக் கடன், உதவித் தொகை, ரேஷன் கார்டு, வேலைவாய்ப்பு, கல்வி உதவித் தொகை உட்பட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து 1,000-க்கும் அதிகமான மனுக்கள் வரப்பெற்றன. இக்கூட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மூலம் 6 பேருக்கு தலா ரூ.6,359 வீதம் ரூ.38,154 மதிப்பில் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம், ஒருவருக்கு ரூ.15,750 மதிப்பில் சக்கர நாற்காலி, 3 பேருக்கு தலா ரூ.11,445 வீதம் ரூ.34,335 மதிப்பில் 3 சக்கர சைக்கிள், ஒருவருக்கு ரூ.2,525 மதிப்பில் பார்வையற்றோருக்கான (ஊன்றுகோல், பிரெய்லி கைக்கடிகாரம், கண் கண்ணாடி), 5 பேருக்கு தலா ரூ.3,500 வீதம் ரூ.17,500 மதிப்பில் காதொலிக் கருவிகள் என மொத்தம் 16 பேருக்கு ரூ.1.08 மதிப்பில் நலத் திட்ட உதவிகளை ஆட்சியர் பிரவீன் குமார் வழங்கினார்.

மேலும், முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தையொட்டி மாவட்ட அளவில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ- மாணவிகளுக்கு ஆட்சியர் பதக்கம், சான்றிதழ், பரிசுகளை வழங்கினார்.

பணிகளை முழுமையாக முடிக்காமல் வீடுகள் ஒதுக்கீடு

ஆட்சியரிடம் நரிக்குறவர்கள் முறையீடு

தஞ்சாவூர்

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி அருகே பணிகளை முழுமையாக முடிக்காமல் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், முழுமையாக பணிகளை முடித்துத் தர வேண்டும் என்றும் நரிக்குறவர்கள் மனு அளித்தனர்.

அதிராம்பட்டினம் கிழக்குக் கடற்கரை சாலையோரம் 40 குடும்பங்களைச் சேர்ந்த 200-க்கும் அதிகமான நரிக்குறவர்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு அரசு சார்பில் பேராவூரணி தொகுதிக்கு உட்பட்ட கொள்ளுக்காடு பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தலா ரூ.3.50 லட்சத்தில் 36 வீடுகள் கட்டப்பட்டன. இந்த வீடுகளை மே 31-ம் தேதி அப்போதைய ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம் திறந்துவைத்து, பயனாளிகளுக்கு வீட்டின் சாவிகளை வழங்கினார்.

இந்நிலையில், இந்த வீடுகளில் முகப்புப் பகுதியில் மட்டும் சிமெண்ட் பூசப்பட்டு, வண்ணம் தீட்டப்பட்டுள்ளதாகவும், வீட்டுக்குள்ளும், வீட்டின் மற்ற 3 சுவர்களிலும் சிமெண்ட் பூசப்படவில்லை என்றும், அதற்குள் வீடுகளை ஒப்படைப்பதுபோல சாவிகளை தந்துவிட்டு மீண்டும் வாங்கிக் கொண்டதாகவும், எஞ்சிய கட்டுமானப் பணிகளை முழுமையாக மேற்கொள்ள இப்பணியை எடுத்துள்ள ஒப்பந்ததாரர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள், கூடுதல் தொகை கேட்பதாகவும் தஞ்சாவூர் ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் ஆர்.ரேவதியிடம் நேற்று நரிக்குறவர்கள் மனு அளித்தனர்.

பேராவூரணி அருகே கொள்ளுக்காட்டில் சிமெண்ட் பூசப்படாமல் நரிக்குறவர்களுக்கு வழங்கப்பட்ட வீடு.

இதுகுறித்து நரிக்குறவர்கள் கூறுகையில், பணிகள் முழுமையாக முடிக்கப்படாத நிலையில், திறப்பு விழாவை நடத்தி, சாவிகளை எங்களிடம் அப்போதைய ஆட்சியர் ஒப்படைத்தார். பின்னர், சாவிகளை அலுவலர்கள் பெற்றுவிட்டனர். எஞ்சிய பணிகளை விரைந்து முடித்து வீடுகளை எங்களிடம் ஒப்படைக்கக் கோரி ஆட்சியரிடம் மனு அளித்தோம் என்றனர்.

இந்து மதத்தின் நம்பிக்கையை சீர்குலைப்பதாக தவெக ஆட்சி உள்ளது

பாஜக மாநில பொதுச் செயலாளர் கருத்து

தஞ்சாவூர்

இந்து மதத்தின் நம்பிக்கையை சீர்குலைப்பதாக தவெக ஆட்சி உள்ளது என பாஜக மாநில பொதுச் செயலாளர் கருப்பு எம்.முருகானந்தம் தெரிவித்தார்.

இதுகுறித்து தஞ்சாவூரில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை தொடங்கியுள்ள இயக்கத்துக்கு, பாஜகவில் பதவிகளில் இல்லாதவர்கள், செயல்படாதவர்கள், ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளானவர்கள் போன்றவர்கள் தான் செல்கின்றனர். இதனால் பாஜகவுக்கு பாதிப்போ, பின்னடைவோ இல்லை. அவர்களில் பலர் மீண்டும் பாஜகவுக்கு திரும்புகின்றனர்.

தமிழகத்தில் தற்போது நடைபெறுவது சிறுபான்மை ஆட்சியா அல்லது சிறுபான்மையினருக்கான ஆட்சியா என சந்தேகப்படும் அளவுக்கு உள்ளது. 2,500 சதுர அடி இடமிருந்தால் கிறிஸ்தவ ஆலயம் கட்டிக் கொள்ளலாம் என சில நாட்களுக்கு முன்பு அரசாணை வெளியிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அமைச்சரவையிலும், அதிகாரிகள் மட்டத்திலும் குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

பள்ளியில் சாதி பிரச்சினை இருந்தால் அதை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. சாதி ரீதியாக மாணவரோ, ஆசிரியரோ செயல்பட்டால் அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விடுத்து, பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் மத அடையாளங்களுடன் இருக்கக் கூடாது என ஒரு அமைச்சர் கூறியுள்ளார்.

கயிறு கட்டுவதும், பொட்டு வைப்பதும் இந்துக்களின் வழக்கம். எனவே, இந்து மதத்தின் நம்பிக்கையைச் சீர்குலைப்பதற்கான ஆட்சியாக இந்த ஆட்சி இருப்பதாகவும், அதற்கான முயற்சியில் ஈடுபடுவதாகவும் தெரிகிறது என்றார்.

அப்போது பாஜக தெற்கு மாவட்டத் தலைவர் பி.ஜெய்சதீஷ் மற்றும் நிர்வாகிகள் யு.என்.உமாபதி, கர்ணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

மயிலாடுதுறை

மயிலாடுதுறை ஆட்சியர் அலுவலகம் முன்பு இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் கவியரசன் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில், டிஎன்பிஎஸ்சி மூலம் மின்வாரிய களஉதவி பணியாளர் இடங்களுக்கு தேர்ச்சி பெற்ற 9,600 பேரையும் பணி அமர்த்த வேண்டும். பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு வழங்க வேண்டும். பெண்களுக்கு உடற்தகுதித் தேர்வில் விலக்கு அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. மாவட்டச் செயலாளர் அய்யப்பன், பொருளாளர் குமரேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தஞ்சாவூர் விளார் சாலையில்

மழைநீர் வடிகாலில் குவிந்துள்ள குப்பையை அகற்றும் பணி தொடக்கம்

தவெக நிர்வாகிகள் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படுகிறது

தஞ்சாவூர்

தஞ்சாவூர் விளார் சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் அப்பகுதியில் சாலையில், சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும் வகையில் குவிந்திருந்த குப்பையை அகற்றும் பணி, தவெக நிர்வாகிகள் சார்பில் நேற்று தொடங்கியது.

தஞ்சாவூர் மாநகராட்சி 39-வது வார்டின் கடைசி பகுதிக்கும், விளார் மற்றும் புதுப்பட்டினம் ஊராட்சிகளுக்கும் இடையே மழைநீர் வடிகால் செல்கிறது. விளார் சாலையின் குறுக்கே செல்லும் இந்த வடிகாலில் குப்பை கொட்டப்பட்டு குவிந்து கிடந்தது. மேலும், பிளாஸ்டிக் குப்பை அதிகளவில் குவிந்து, துர்நாற்றம் வீசியதுடன், ஏராளமான பன்றிகள் சுற்றித்திரிவதால் மக்களின் சுகாதாரம் கேள்விக்குறியாகியது.

விளார் சாலையில் மழைநீர் வடிகாலில் பொக்லைன் மூலம் நேற்று மேற்கொள்ளப்பட்ட குப்பை அகற்றும் பணி.

இந்தக் குப்பையை அகற்றுவதில் மாநகராட்சி மற்றும் விளார், புதுப்பட்டினம் ஊராட்சிகள் இடையே எல்லைப் பிரச்சினை இருந்துவந்ததால், மேலும் மேலும் குப்பை அதிகமானது.

இந்நிலையில், அப்பகுதியைச் சேர்ந்த தவெக நிர்வாகிகள் ஏற்பாட்டில், பொக்லைன் இயந்திரம் மூலம் வாய்க்காலில் குவிந்திருந்த குப்பையை அகற்றும் பணி நேற்று தொடங்கியது. இதில் 4 டன் குப்பை அகற்றப்பட்டு மாநகராட்சிக்குச் சொந்தமான வாகனங்கள் மூலம் ஜெபமாலைபுரம் குப்பைக் கிடங்குக்கு அனுப்பப்பட்டது. இதனிடையே, தவெக தஞ்சாவூர் மாநகரச் செயலாளர் எம்.எஸ்.வசந்த், குப்பை அகற்றும் பணியைப் பார்வையிட்டார்.

குப்பை அகற்றும் பணி தொடர்ந்து 2 அல்லது 3 நாட்களுக்கு மேற்கொள்ளப்படும் என்றும், மழைக் காலம் விரைவில் வர உள்ள நிலையில், குப்பை அகற்றப்படுவதன் மூலம் மழைநீர் எளிதாகச் செல்ல வாய்ப்பு ஏற்படும் என்றும் தவெகவினர் தெரிவித்தனர்.

இனி அதிக பாரம் ஏற்ற மாட்டோம்

நாகை மாவட்ட லாரி உரிமையாளர்கள் சங்கம் முடிவு

நாகப்பட்டினம்

அரசு விதியை முறையாக பின்பற்றி இனி அதிக பாரம் ஏற்றமாட்டோம் என நாகை மாவட்ட லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

நாகை மாவட்ட லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் அவசர ஆலோசனைக் கூட்டம், நாகை வர்த்தக சங்கக் கட்டிடத்தில் நேற்று நடைபெற்றது. இதில், லாரி தொழிலைப் பாதுகாக்கும் வகையில் ஆலோசனை நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், பழுது நீக்குதல், பராமரிப்பு ஆகிய செலவுகளை சமாளிக்கவே அதிக பாரம் ஏற்றி வந்த நிலையில், நாகை மாவட்டத்தில் உள்ள லாரிகள், இனி தமிழக அரசின் விதிகளைப் பின்பற்றி சரியான பாரம் ஏற்ற வேண்டும். அதிக பாரம் ஏற்றக் கூடாது. கரூரில் இருந்து பாரம் ஏற்றி வரும் மற்ற மாவட்ட லாரிகளும் இதை கடைபிடிக்க வேண்டும். சரியான பாரம் ஏற்றுவதால் இதற்கான புதிய வாடகை விவரம் விரைவில் அறிவிக்கப்படும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், நாகை மாவட்டத்துக்குள் அதிக பாரம் ஏற்றி வரும் லாரிகள் மீது அரசுத் துறை அலுவலர்கள் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்யப்பட்டது.

மின்சாரம் பாய்ந்து விவசாயி உயிரிழப்பு

மயிலாடுதுறை

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் அருகே மறையூர் கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி அன்புவீரன்(56).

இவர் நேற்று காலை தனது வயலில் பம்புசெட் மோட்டார் சுவிட்சை ஆன் செய்தபோது, எதிர்பாராதவிதமாக மின்சாரம் பாய்ந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இதுகுறித்து குத்தாலம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

காரைக்காலில் நிலக்கரி ஏற்றிச் செல்லும்

சரக்கு ரயில் நேரத்தை மாற்ற கோரிக்கை

காரைக்கால்

காரைக்கால் மக்கள் நல இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அ.வின்சென்ட், நிர்வாகி முகமது யூசுப் உள்ளிட்ட நிர்வாகிகள், ஆட்சியர் இஷிதா ராட்டியிடம் அளித்த மனு: புதிதாக அமைக்கப்பட்ட காரைக்கால்- பேரளம் அகல ரயில் பாதையில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக நிலக்கரி ஏற்றிச் செல்லும் சரக்கு ரயில், 60 பெட்டிகளுடன் சென்று வருகிறது. இதனால், காரைக்கால் நகரப் பகுதியில் நிலக்கரி துகள்கள் ஆங்காங்கே சாலைகளில் சிதறிக் கிடக்கின்றன. இதனால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த நேரங்களில் சரக்கு ரயில்கள் இயக்கப்படுவதால் நகரப் பகுதியில் உள்ள ரயில்வே கேட் மூடப்படும் போது, பள்ளி மாணவர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் இதர வேலைகளுக்கு செல்வோர் என அனைத்து தரப்பினரும் 20 நிமிடங்கள் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அரசு பொது மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய ஆம்புலன்ஸ் வாகனங்களும் செல்ல முடியவில்லை.

காரைக்கால் துறைமுகத்தில் இருந்து நாகை, திருவாரூர் வழியாக சரக்கு ரயில்கள் இயக்கப்பட்டு வந்த நிலையில், அந்த வழித்தடத்தை மாற்றி காரைக்கால் வழியாக இயக்கப்படுவதால் கடும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு வருகிறது.

எனவே நிலக்கரி சரக்கு ரயில் போக்குவரத்து வழித்தடத்தை மாற்ற வேண்டும் அல்லது இரவு 10 மணிக்கு மேல் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் தெரிவித்துள்ளனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல் மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

பணப்பரிமாற்றங்களை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரதிபலனாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.16, தரைத்தளம், பிரீமியர் ஏவியோன், நியூ ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, கும்பகோணம், தமிழ்நாடு - 612001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	15.05.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1628218860000003 & 1628210090000004 1.M/s. துர்கா தேவி டெக்ஸ்டைல்ஸ் 2.Mr. கிஷோர் குமார் 3.Mrs.நீத்து வினோத் புலோர்	(i) 28.06.2022 (ii) 24.06.2022 அன்றுள்ளபடி ₹ 45,39,297/- (ரூபாய் நாற்பத்து ஐந்து லட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஏழு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.02.2023 & நேரடி சுவாதீனம் - 14.06.2025	₹ 93,09,781.96 (ரூபாய் தொண்ணூற்று மூன்று லட்சத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று எண்பத்து ஒன்று மற்றும் பைசா தொண்ணூற்று ஆறு மட்டும்)	₹ 40,78,000/- (ரூபாய் நாற்பது லட்சத்து எழுபத்து எட்டாயிரம் மட்டும்)	₹ 4,07,800/- (ரூபாய் நான்கு லட்சத்து ஏழாயிரத்து எண்ணூறு மட்டும்)

சொத்து விவரம்: கும்பகோணம் பதிவு மாவட்டம் மற்றும் கும்பகோணம் சார் பதிவகம் எல்லைக்குட்பட்ட T.S.எண்.1023 & 1024, **கதவு எண்.23, 23A, நகராட்சி 7வது வார்டு, முட்டாளி தெரு, எண்.2, மேலகாவேரி தெரு, கும்பகோணம் டவுன், தஞ்சாவூர் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 27 அடி, தெற்கு வடக்காக இரண்டு பக்கமும் 75 அடி, **ஆக மொத்தம் 2025 சதுர அடி (188.13 சதுர மீட்டர்) நிலம் மற்றும் RCC கூரைப்போட்ட குடியிருப்பு கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: தெரு, கிழக்கு: சுவாமிநாதன் வீடு மற்றும் பின்புறம், மேற்கு: தெரு, தெற்கு: ரஹிம் வீடு மற்றும் பின்புறம்.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 04.07.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 03.07.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	02.07.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.ஞானவேல் - 98410 17131 / Mr.டீஜோ சாஜன் – 78451 92961.

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.**பிரபாகரன் **Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 16.06.2026

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun on behalf of KSL MEDIA LIMITED and Printed by Venkatesan K at THG PUBLISHING PVT.LTD. Ward No. 27, RS No. 43-1B, Ariyamangalam Zone, Varaganery Village, Chennai Bye Pass Road, Senthaneerpuram, Tiruchirapalli-620004. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).